மதுரை மாநகராட்சி

**<u>வரவு - செலவு நிதி மதிப்பீடு மாமன்றக் கூட்டம்</u>**

2006ம் ஆண்டு **பிப்ரவரி** திங்கள் **24ம்** நாள் **வெள்ளிக்கிழமை** காலை **10.30** மணிக்கு

அறிஞர் அண்ணா மாளிகை

பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்

மதுரை மாநகராட்சி 2006 - 2007-மற்றும் 2007-2008-ம் ஆண்டுகளுக்கான

**வரவு - செலவு நிதி மதிப்பீடு - மாமன்றக் கூட்ட நிகழ்ச்சி நிரல்**

---

அ) திருக்குறள் வாசித்தல்

ஆ) **தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

**<u>உறுதிமொழி</u>**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும், பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(செய்தி மற்றும் சுற்றுலாத்துறை அரசாணை (நிலை) எண்.245 நாள் 13.11.98)

---

**<u>வரவு - செலவு நிதி மதிப்பீடு கூட்டப்பொருள்</u>**

**<u>1) பி.4 / 33908 / 2005</u>**

1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டம் 186(1)-வது பிரிவின்படி, மதுரை மாநகராட்சியின் பொதுநிதி, குடிநீர் & வடிகால் நிதி மற்றும் ஆரம்பக்கல்வி நிதி கணக்குகளின் 2005-2006 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட நிதி மதிப்பீடு மற்றும் 2006 – 2007 மற்றும் 2007 - 2008ம் ஆண்டிற்கான நிதி மதிப்பீடு ஆகியவற்றை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன் வைக்கப்பட்டதில், மேற்படி குழுவின் 19-01-2006-ந் தேதிய 76-ம் எண் தீர்மானத்தில் கண்டுள்ள பரிந்துரையோடு, மேற்படி 2005 - 2006ம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட நிதி மதிப்பீடு மற்றும் 2006 – 2007 மற்றும் 2007 - 2008ம் ஆண்டிற்கான வரவு, செலவு நிதி மதிப்பீடுகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>குறிப்பு:</u>** 1) நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடிதம் எண். 41013/ 2005/L3, நாள்.19.7.05ன் படி, 2006-2007 மற்றும் 2007-2008 -ம் நிதியாண்டுகளுக்கு நிதி மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

2) வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தீர்மானம் எண்.76 / நாள். 19.1.2006-ல் பற்றாக்குறையை சரிக்கட்ட மாநகராட்சிக்கு வருவாய் பெருக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற குறிப்புடன் 2005-2006 ஆம் வருட திருத்தப்பட்ட நிதி மதிப்பீடு மற்றும் 2006-2007 & 2007-2008 ஆம் வருட நிதி மதிப்பீடுகளை ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 583</u>**

**<u>பொதுநிதி, குடிநீர் ‡ வடிகால் மற்றும் ஆரம்பக் கல்வி நிதி கணக்குகளின், 2005-2006 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட வரவு - செலவு மதிப்பீட்டையும், 2006-2007 மற்றும் 2007-2008ம் ஆண்டுகளுக்கான வரவு - செலவு நிதி மதிப்பீட்டையும் மாமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, மாமன்றம் ஏகமனதாக ஒப்புக் கொள்கிறது.</u>**

**இடம் : மதுரை** **(ஒம்...) செ. இராமச்சந்திரன்**

**மேயர்**

**நாள் : 17.2.2006** **மதுரை மாநகராட்சி**

**" கண்ணைக் காப்பது இமை "**
**" மண்ணைக் காப்பது மழை "**

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2006ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22-ம் நாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும் மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின் சாதாரணக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள் : " படுபயன் வெ.:கிப் பழிப்படுவ செய்யார்**
**நடுவன்மை நாணு பவர்" - குறள் எண்.181**

**பொருள் :** நடுவு நிலைமை அல்லாதவற்றைச் செய்ய நாணும் பெரியோர்கள், பிறர்க்குரிய பொருளை விரும்புதலால் ஏற்படும் பயனை உணர்ந்து, உலகம் பழிப்பனவற்றைச் செய்ய மாட்டார்கள்.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும், பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(செய்தி மற்றும் சுற்றுலாத்துறை அரசாணை (நிலை) எண்.245 நாள் 13.11.98)

## 1) சி.டபிள்யு.2 / 00365 / 2006

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல் -1 விதி 19 (2)ன் படி 19.1.2006ம் தேதி நடைபெற்ற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக் கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக் கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 536**
**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

**மேயர் அவர்களின் தீர்மானம் - 1**
**மாமன்ற தீர்மானம் எண் : 537**

தமிழ்நாடு மக்களின் நலன்கருதியும் குறிப்பாக தென்மாவட்ட மக்களின் நலன்கருதியும், மதுரை மாநகராட்சி மாமன்றம் நிறைவேற்றும் முக்கிய தீர்மானம்.

மதுரை அரசு இராசாசி மருத்துவமனை,தனது மருத்துவமனையை விரிவுபடுத்தவும், மருத்துவ ஆராய்ச்சியை ஊக்கப்படுத்தவும், மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான, அறிஞர் அண்ணா

பேருந்து நிலைய இடத்தை ஒதுக்கீடு செய்வதற்கு மாமன்றம் கடந்த 24.9.2003 அன்று தீர்மானம் எண்.119ல் ஒதுக்கீடு செய்து, தீர்மானம் நிறைவேற்றியது. அன்றைய தீர்மானம் விபரம் வருமாறு,

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா பேருந்து நிலைய வளாக இடத்தினை, ஆரசு இராசாசி மருத்துவமனை விரிவாக்கத்திற்கு ஒதுக்கக்கோரிய மதுரை, அரசு இரசாசி மருத்துவமனை முதல்வர் அவர்களின் 22.9.2003-ந் தேதிய ந.க.எண்.16436 / தி.வ./ 2002 எண்ணிட்ட கடிதம் வாசிக்கப்பட்டு,

மதுரை மாநகராட்சிக்கு, சொந்தமான சர்வே வார்டு எண்.10, பிளாக் எண்.8, சர்வே எண்.489-ல் அண்ணா பேருந்து நிலையம் இயங்கி வந்தது. ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைந்த பிறகு, நகரப் பேருந்து மட்டும், இப்பேருந்து நிலையத்தின் கிழக்குப் பகுதியில் இயங்கி வருகிறது. மேற்கு பகுதி இடத்தின் வடபகுதியில், கடைகளாக மாற்றப்பட்டு உள்ளது.

இப்பகுதியில், வாகனம் நிறுத்தும் இடமாக மாற்றியமைக்க மாமன்றம் தனது 26.2.2002-ம் தேதியில் 116 எண்ணிட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தின் கிழக்குப் பக்கம் 0.60 ஏக்கர் இடமும், மேற்குப் பக்கம் 2.52 ஏக்கர் இடமும், மொத்தம் 3.12 ஏக்கர் இடமும் உள்ளது. முதல்வர், அரசு இராசாசி மருத்துவமனை, மதுரை அவர்களின் கோரிக்கையில், தற்போதுள்ள மருத்துவமனையில் நோயாளிகள் மற்றும் பார்வையாளர்கள் கூட்டம் அதிகமாக இருப்பதாலும், மருத்துவமனையில் வழக்கமான பணிகளுக்கு இடையூறு ஏற்படுவதாலும், இவற்றை தவிர்க்கும் பொருட்டும், விபத்து மற்றும் உயிர்காப்பு இருதய நோய் மற்றும் அறுவை சிகிச்சைப் பிரிவு போன்ற சில பிரிவுகளை அமைக்க மதுரை அண்ணா பேருந்து நிலையத்தில் 3 ஏக்கர் இடம் ஒதுக்கீடு செய்ய வேண்டப்படுகிறது.

மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான, அண்ணா பேருந்து நிலையத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள நகரப் பேருந்து நிலையத்தினை நிலை நிறுத்தியும், மேற்குப் பகுதி இடத்தின் சுமார் 2.52 ஏக்கர் இடத்தினை அரசு இராசாசி மருத்துவமனைக்கு ஒதுக்கீடு செய்து வழங்க அரசின் ஆணை வேண்ட மாமன்றத்தின் முடிவினைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு வைக்கப்பட்டிருந்தது, அரசு இராசாசி மருத்துவமனைக்கு மேற்கண்ட இடத்தை ஒப்படைப்பதற்கும் மாமன்றம் ஏகமனதாக ஒப்புக் கொண்டது.

தற்போது மேற்கண்ட இடம் இலவசமாக அரசு இராசாசி மருத்துவமனைக்கு மாமன்றம் அளிக்கிறதா அல்லது அதற்குரிய பணம் கேட்கப்படுகிறதா என்ற சந்தேகம் மாநில சுகாதாரத் துறைக்கு ஏற்பட்டிருக்கிறது. மேற்கண்ட சந்தேகத்தை போக்கும் வண்ணம் மேற்கண்ட இடத்தை மதுரை மாநகராட்சி, தமிழ்நாட்டு மக்களின் நலன்கருதியும், குறிப்பாக தென்மாவட்ட மக்களின் நலன்கருதியும், மருத்துவ சேவை செய்வதில் மாநகராட்சியின் பங்கு மிக முக்கியமானது என்பதாலும், மேற்கண்ட இடத்தை மதுரை, அரசு இராசாசி மருத்துவமனை விரிவுபடுத்துவதற்கும், மருத்துவ ஆராய்ச்சியை ஊக்கப்படுத்துவதற்கும், இம்மாமன்றம் எந்தவித பலனையும் எதிர்பார்க்காமல் இலவசமாகவே ஏகமனதாக இத்தீர்மானம் மூலம் மாமன்றம் ஒப்படைக்கிறது. இந்த ஒப்படைப்பை ஏற்றுக்கொண்டு, உடனடியாக மருத்துவமனையை கட்டவும், மக்கள் பணியை விரைந்து செய்யவும், மாநில சுகாதாரத் துறையையும், மதுரை அரசு இராசாசி மருத்துவமனை நிர்வாகத்தையும், இம்மாமன்றம் இத்தீர்மானம் மூலம் கேட்டுக் கொள்கிறது.

## மேயர் அவர்களின் தீர்மானம் - 2
## மாமன்ற தீர்மானம் எண் : 538

மதுரை மாநகராட்சி எல்லையில் அழகான டைட்டில் பார்க் அமைப்பதற்கு, மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. தயாநிதிமாறன் அவர்கள், மதுரையில் மதுரை வர்த்தகச் சங்க கட்டிடத்தில் நடைபெற்ற, N.M.R. சுப்பராம் அவர்களின் ஸ்டாம்பு வெளியீட்டு விழாவில், அதற்குரிய நிதி ஒதுக்குவதாக இசைவு தந்துள்ளார். மேற்கண்ட டைட்டில் பார்க் அமைப்பதற்கு, 5 ஏக்கர் நிலம் மாநகராட்சி எல்லைகயில், உடனடியாக ஒதுக்கீடு செய்து தரவேண்டும் என்றும், அக்கூட்டத்தில் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.தயாநிதிமாறன் அவர்கள், மதுரை மாநகராட்சியிடம் வலியுறுத்தி உள்ளார். எனவே மாநகராட்சி ஆணையாளர் அவர்கள், டைட்டில் பார்க் அமைப்பதற்கு, சிறந்த இடம் எது என்பதை ஆய்வுசெய்து, மாமன்றத்திற்கும், மாநில அரசிற்கும், மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்களுக்கும், விரைவில் தெரியப்படுத்த மாமன்றம் இத்தீர்மானம் மூலம் ஆணையாளர் அவர்களை கேட்டுக் கொள்கிறது.

தொடர்ந்து, கிழக்கு மண்டலத்தலைவர் எழுந்து பேசுகையில், தனது வார்டில் குப்பைகள் அதிகமாக சேருக்கிறது என்றும், பணியாளர்கள் பற்றாக்குறையால், குப்பைகளை சரிவர அள்ள முடியவில்லை என்றும், போதிய பணியாளர்கள் நியமிக்க வேண்டும் அல்லது தனியார் மயமாக்க வேண்டுமென்றும் தெரிவித்தார். அதற்கு நகர் நல அலுவலர் (பொ) பதிலளித்து பேசும்போது, ஏற்கனவே தெற்கு மண்டலம் தனியார் மயமாக்கப்பட்டு விட்டது என்றும், அந்த மண்டலத்திலுள்ள பணியாளர்கள் மற்ற மண்டலங்களுக்கு பிரித்து அனுப்பப்படும்போது, கிழக்கு மண்டலத் தலைவர் வார்டுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவித்தார். யானைக்கல் பகுதிகளில் இரவு நேரங்களில் வைக்கப்படும் சாலையோர கடைகளை தினமும் அகற்ற வேண்டுமென்றும், மாநகராட்சியிலிருந்து லைசென்ஸிற்கு விடுப்படும் இனங்களில், லைசென்ஸ் கட்டண விபரம், அளவு, நேரம் முதலியவற்றை குறிப்பிட்டு அறிவிப்பு பலகை வைக்க வேண்டுமென்று கோரியதற்கு, உதவி ஆணையாளர் (வருவாய்) லைசென்ஸ் இனங்களுக்கு உத்தரவு வழங்கும்போது, இதை நிபந்தனையாக விதிக்கப்பட்டு, வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

தொடர்ந்து மேற்கு மண்டலத் தலைவர் எழுந்து பேசுகையில், சிந்தாமணி கால்வாய் தூர்வாரப்பட வேண்டும் என்று கோரியதற்கு, பொதுப்பணித் துறை மூலம் மதிப்பீடு போடப்பட்டுள்ள விபரம் பெற்று தெரிவிப்பதாக உதவி நிர்வாகப் பொறியாளர் (மேற்கு) தெரிவித்தார். மேலும், தேனி மெயின் ரோடு மூக்கையாத்தேவர் சிலை அருகிலுள்ள கால்வாயை, நெடுஞ்சாலை துறைக்கு கடிதம் வைத்து சிறிய பாலம் கட்ட வேண்டுமென்று கோரினார். இடையில் 35வது வட்ட உறுப்பினர், குறுக்கிட்டு மாநகராட்சி அடிபம்புகள், குழாய் கைப்பிடிகள் அடிக்கடி திருடு போய்கிறது என்றும், காவல்துறையில் புகார் தெரிவிக்க வேண்டுமென்றும் கூறினார். மேலும், 71வது வட்ட உறுப்பினர் ரயில்வே காலனியில் உள்ளது போல், திருடு போகாமல் வெல்டிங் செய்து வைக்கலாம் என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து கூட்டம் நடைபெற்றது. சாதாரணக் கூட்டப் பொருள் எடுத்துக் கொள்ளப்பட்டது.

## **<u>2)</u>** **<u>சி.டபிள்யூ.2 /01134/ 2005</u>**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல் -1 விதி 19 (2)ன் படி 20.1.2006ம் தேதி நடைபெற்ற கல்விக்குழுக் கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

<u>குறிப்பு :</u> கல்விக்குழுக் கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 539</u>**
**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

**<u>மேயர் அவர்களின் தீர்மானம்</u>**
**<u>மாமன்ற தீர்மானம் எண் : 540</u>**

மதுரையின் தென்பகுதியில் வாழும் மக்களுக்கு, பாலரெங்காபுரம் அரசு மருத்துவமனை பெரிதும் பயனுள்ளதாக அமைந்து வருகிறது. ஆனால் நவீன மருத்துவ வசதிக்கு தகுந்தாற்போல், அந்த மருத்துவமனை விரிவுபடுத்தவில்லை.

மேற்கண்ட மருத்துவமனையை நவீன கருவிகள் வாங்கி வைத்தால், அப்பகுதி மக்கள் பெரிதும் பயன் அடைவார்கள். எனவே மேற்கண்ட மருத்துவமனையை நவீனப்படுத்த,

1) எக்ஸ்ரே எடுக்க கருவிகள்
2) இரத்தப் பரிசோதனைக்கூடம்
3) மலம் நீர் பரிசோதனைக் கருவிகள்
4) கல் பரிசோதனைக் கருவிகள்
5) இருதய பரிசோதனை கருவிகள் - கண் பரிசோதனைக் கூடம்.

இவைபோன்ற நவீன கருவிகளுடன் அனைத்துப் பிரிவும் தொடங்கப்பட. நிதி ஒதுக்கீடு செய்ய, மாநில அரசை இம்மாமன்றம் இத்தீர்மானம் மு:லம் கேட்டுக் கொள்கிறது

## **<u>3)</u>** **<u>சி.டபிள்யூ.2 /01188/ 2006</u>**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல் -1 விதி 19 (2)ன் படி 27.1.2006ம் தேதி நடைபெற்ற வேலைக்குழுக் கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

<u>குறிப்பு :</u> வேலைக்குழுக் கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 541</u>**
**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

## **<u>4)</u>** **<u>சி.டபிள்யூ.2 /1133/ 2005</u>**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல் -1 விதி 19 (2)ன் படி 13.2.2006ம் தேதி நடைபெற்ற நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுக் கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

<u>குறிப்பு :</u> நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுக் கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 542</u>**
**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

## 5) ம.தி.1 / 2032/ 2006

தமிழகத்திலுள்ள சென்னையைத் தவிர பிற உள்ளாட்சி பகுதிகளிலுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவுகளை ஒழுங்கு படுத்துவது சம்பந்தமான நிபந்தனைகளைத் தளர்த்தி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறையில் வெளியிடப்பட்டுள்ள 19.01.2006ம் தேதிய அரசாணை எண்.11ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 543**

**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

## 6) பி.11 / 11621 / 2005

இம்மாநகராட்சியில் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 1.1.2006 முதல் அகவிலைப்படி 67% லிருந்து 71% ஆக உயர்த்தி வழங்க அரசாணை எண். 58 / 13.1.2006 (நிதி ஓய்வூதியம்) துறை நாள். 13.1.2006 வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட அரசாணையின்படி 1.1.2006 முதல் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியத்தில் அகவிலைப்படி 71% சேர்த்து வழங்க வெளியிடப்பட்டுள்ள அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** 4% அகவிலைப்படி உயர்வு 1.1.2006 முதல் வழங்குவதால், மாதம் ஒன்றுக்கு சுமார் ரூ.3.20,000/- உத்தேச கூடுதல் செலவு ஏற்படும்.

**மாமன்ற தீர்மானம் எண் : 544**

**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

## 7) பி.1 / 04276/ 2006

மதுரை மாநகராட்சியில் பணியாற்றும் பணியாளர்களுக்கு தற்சமயம் வழங்கப்பட்டு வரும் 71 சதவீத அகவிலைப்படியில் 50 சதவீதத்தினை அகவிலை ஊதியமாக தனியாக வைத்தும், மேலும் அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலை ஊதியம் ஆகிய இரண்டிற்கும் சேர்த்து 21 சதவீத அகவிலைப்படி கணக்கிட்டு வழங்கவும், ஊதிய ஏற்ற முறைக்கேற்ப இதர படிகளும் வழங்க அனுமதித்து உத்திரவிட்டுள்ள 7.2.2006ம் தேதிய அரசாணை எண். 105, மற்றும் 106 நிதி (படிகள்) துறை அரசாணைகளை மாமன்றத்தின் தகவலுக்கும் மேற்கண்ட அரசாணைகளின் பிரகாரம் 1.1.2006 முதல் திருத்தியமைக்கப்பட்ட ஊதியம் மற்றும் அகவிலை ஊதிய அடிப்படையில் அகவிலைப்படி மற்றும் இதர படிகளை வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 545**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 8) ம.பொ.4/ம.எண்.1349/2005

மதுரை மாநகராட்சி வார்டு எண்.12ல் அமைந்துள்ள காலங்கரை வாய்க்கால் சீர் அமைக்கும் வேலைக்கு Reach I (0 to 300 M) 2005-2006ம் ஆண்டு விலை விகிதத்தில் ரூ.16,05,000/- மதிப்பில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 546**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 9) ம.பொ.4/ம.எண்.1345/2005

மதுரை மாநகராட்சி வார்டு எண்.12ல் அமைந்துள்ள காலங்கரை வாய்க்கால் சீர் அமைக்கும் வேலைக்கு Reach II (301 to 600 M) 2005-2006ம் ஆண்டு விலை விகிதத்தில் ரூ.16,05,000/- மதிப்பில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 547**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 10) ம.பொ.4/ம.எண்.1401/2005

மதுரை மாநகராட்சி வார்டு எண்.12ல் அமைந்துள்ள காலங்கரை வாய்க்கால் சீர் அமைக்கும் வேலைக்கு Reach III (601 to 900 M) 2005-2006ம் ஆண்டு விலை விகிதத்தில் ரூ.16,05,000/- மதிப்பில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 548**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 11) B 30 / 04328 / 06

மதுரை மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பிரிவிற்கு 2006–2007ம் ஆண்டிற்கு தேவையான தெருவிளக்கு சாமான்கள் கீழ்கண்ட விபரப்படி கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | கொள்முதல் செய்யப்படும் பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 70 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்கு | 1000 |
| 2. | 150 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்கு | 1200 |
| 3. | 250 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்கு | 2300 |
| 4. | 400 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்கு (SON-T) | 300 |

மேற்கண்ட பொருட்களை கொள்முதல் செய்ய உத்தேச செலவின தொகை 24,42,500/-ஆகும். எனவே மேற்கண்ட சோடியம் ஆவிவிளக்குகளை முன்னணி நிறுவனங்களிடமிருந்து டெண்டர் வரவழைத்து பொருட்களை கொள்முதல் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு

**குறிப்பு:** மேற்கண்ட செலவினத் தொகை 2006–07 ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டிற்கு உட்பட்டது.

**மாமன்ற தீர்மானம் எண் : 549**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 12) B 30 / 04677 / 06

மதுரை மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பிரிவிற்கு 2006–2007ம் ஆண்டிற்கு தேவையான தெருவிளக்கு சாமான்கள் கீழ்கண்ட விபரப்படி கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | கொள்முதல் செய்யப்படும் பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 40 வாட்ஸ் குழல் விளக்குகள் | 32000 |
| 2. | 250 மெட்டல் ஹாலைடு விளக்குகள் | 50 |
| 3. | 400 மெட்டல் ஹாலைடு விளக்குகள் | 100 |
| 4. | 300 SC பல்புகள் | 500 |
| 5. | 11 W CFL பல்புகள் | 300 |
| 6. | 18 W CFL பல்புகள் | 200 |

மேற்கண்ட பொருட்களை கொள்முதல் செய்ய உத்தேச செலவின தொகை 18,00,000/-ஆகும். எனவே மேற்கண்ட சோடியம் ஆவிவிளக்குகளை முன்னணி நிறுவனங்களிடமிருந்து டெண்டர் வரவழைத்து பொருட்களை கொள்முதல் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு

**குறிப்பு :** மேற்கண்ட செலவினத் தொகை 2006–07 ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டிற்கு உட்பட்டது.

**மாமன்ற தீர்மானம் எண் : 550**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 13) B 30 / 04329 / 06

மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பிரிவிற்கு 2006–2007ம் ஆண்டிற்கு தேவையான தெருவிளக்கு சாமான்கள் கீழ்கண்ட விபரப்படி கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | கொள்முதல் செய்யப்படும் பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 40 வாட்ஸ் டியூப்லைட் சோக் | 3000 |
| 2. | 70 வாட்ஸ் சோடியம் சோக் | 500 |
| 3. | 150 வாட்ஸ் சோடியம் சோக் | 750 |
| 4. | 250 வாட்ஸ் சோடியம் சோக் | 1000 |
| 5. | 400 வாட்ஸ் சோடியம் சோக் | 150 |
| 6. | டியூப்லைட் சைடு ஹோல்டர் | 7000 |

மேற்கண்ட பொருட்களை கொள்முதல் செய்ய உத்தேச செலவின தொகை 24,94,500/-ஆகும். எனவே மேற்கண்ட சோடியம் ஆவிவிளக்குகளை முன்னணி நிறுவனங்களிடமிருந்து டெண்டர் வரவழைத்து பொருட்களை கொள்முதல் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு

**குறிப்பு:** மேற்கண்ட செலவினத் தொகை 2006–07 ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டிற்கு உட்பட்டது.

**மாமன்ற தீர்மானம் எண் : 551**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 14) ம.பொ.6 /ம.எண்.1418/ 2004

மதுரை மாநகராட்சி மைய பொறியியல் பிரிவு வார்டு எண்.41ல் உள்ள கால்வாயை H.M.S. காலனி முதல் TVS நகர் பள்ளிக்கூடம் வரை தூர்வாரும் பணி வெள்ள நிவாரண பணியினை செய்திட வார்டு உதவிப் பொறியாளரால் ரூ.17,60,000/- க்கு (ரூபாய் பதினேழு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டு வேலைக்கு மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 552**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 15) ம.பொ. 3/ ம.எண். 1574 /05

மதுரை மாநகராட்சி மையப் பொறியியல் பிரிவு வார்டு எண். 2 J.N. நகர் 1 வது . 2 வது தெரு குறுக்குத்தெரு .P&T நகர் 1வது 2வது தெரு மற்றும் குறுக்கு தெரு சேக்கிழார் வீதியில் உள்ள கல்சந்து ஆகிய பகுதிகள், அதேபோல் நரிமேடு மருதுபாண்டியர்நகர் வடக்கு தெரு சிங்கராயர் காலணி பார்க் கிழக்கு தெரு பகுதியிலும் குடிநீர் மெயின் இல்லாமல் பொது மக்கள் மிகவும் சிரமம் படுகிறார்கள், மேற்கண்ட தெருக்களுக்கு புதிய குடிநீர் மெயின் அமைக்க ரூபாய் 15.30 லட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது மேற்கண்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்க மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு

**மாமன்ற தீர்மானம் எண் : 553**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 16) ம.பொ. 6/36235/05

மதுரை மாநகராட்சி மையப் பொறியியல் பிரிவு வார்டு எண். 37ல் மேற்கு சித்திரை வீதி, வடக்கு சித்திரை வீதி சந்திப்பில் நடைமேடையில் உத்தேசமாக **3'.0"** அகலத்தில் ஆண்கள், பெண்கள் கழிப்பறைகள் அமைக்க மதுரை மாவட்ட எக்ஸ்னோரா அமைப்பினருக்கு தங்களது சொந்த செலவில் கட்டிக்கொள்ள மாநகராட்சி நிபந்தனைகளுக்குட்பட்டு 02.12.2005ல் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று அனுமதி வழங்கப்பட்டது. மாவட்ட ஆட்சியர் தலைமையில் 18.01.2006 அன்று நடந்த "சுற்றுலா மேம்பாடு" கூட்டத்தில் லாபநோக்கின்றி மாவட்ட எக்ஸ்னோரா அமைப்பு மிகக் குறைந்த கட்டணத்தை, உபயோகிக்கும் பொதுமக்களிடமிருந்து பெற்று, பராமரிப்பு செலவுகளை ஈடுகட்டி கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. பராமரிக்க ஏற்படும் செலவுகளை ஈடுகட்ட, சிறுநீர் கழிக்க ரூ. 1/- மட்டும், மற்றவைகளுக்கு ரூ. 2/- மட்டும், வெளிநாட்டினர் உபயோகத்திற்கு ரூ. 5/- மட்டும் நன்கொடையாக வசூல் செய்து கொள்ள மாவட்ட எக்ஸ்னோரா அமைப்பினர் 06.02.2006ல் அனுமதி கோரியுள்ளனர். மதுரை மாவட்ட எக்ஸ்னோரா அமைப்பினருக்கு மேற்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை வசூல் செய்து கொள்வதற்கு அனுமதி வழங்குவது சம்பந்தமாகவும், ஏற்கனவே வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு வழங்கப்பட்ட அனுமதிக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

குறிப்பு : மாநகராட்சி நிபந்தனை எண். 6ல் கழிப்பறை கட்டணம் ஏதும் வசூல் செய்யக் கூடாது என 02.12.2005 ல் அனுமதி வழங்கப்பட்டது.

**மாமன்ற தீர்மானம் எண் : 554**
**பின்னேற்புடன் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 17) ம.நி.2 / 19757/ 2003

மதுரை மாநகராட்சியில் நேரடி நியமனம் மூலம் பணியமர்த்தப்பட்ட திரு. எஸ்.குழந்தைவேல், உதவிப் பொறியாளர் தனது பணிக்காலத்தை வரன்முறைப்படுத்தவும், தகுதிகாண் பருவம் நிறைவு செய்து அறிவிக்கவும் கோரியுள்ளார். 1996–ல் பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு மாநகராட்சிப் பணிவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளின்படி தொடர்ச்சியான மூன்று ஆண்டுகாலப் பணியில், இரண்டு காலம் தகுதிகான் பருவம் முடிப்பதற்குள்ளாக பொதுப்பணித்துறை சார்நிலைப் பணி தொகுதி – 2 கணக்குத் தேர்வு பகுதி 1 மற்றும் 2 (PWD Subordinate Service's Class-II – Account Test Part I & II) ஆகிய துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். திரு. எஸ். குழந்தைவேல் உதவிப் பொறியாளர் தகுதிகான் பருவத்திற்குள்ளாக தேர்ச்சி பெறாததால், பணிவிதி அறிவுரைகளின்படி மேலும் ஓராண்டு காலக்கெடு நீட்டித்து அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து கீழ்கண்ட தேதிகளில் தேர்ச்சி பெற்று பணிவிதி நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ளார். எனவே இவருக்கு கீழ்க்கண்டவாறு பணி ஒழுங்குப்படுத்தியும், கணக்குத் தேர்வு தேர்ச்சி பெற்ற (Account Test) கடைசி நாளுக்கு அடுத்த தினத்திலிருந்து தகுதிகான் பருவம் நிறைவு செய்ததாக அறிவிக்கவும் வேண்டியுள்ளது.

| வ. எண். | பெயர் , பதவி | பிறந்த தேதி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறைபடுத்திய மற்றும் தகுதி காண் பருவம் தொடங்கிய நாள் | தகுதிகாண் பருவம் நிறைவு செய்ய வேண்டிய நாள் | கணக்குத் தேர்வு தேர்ச்சி பெற்ற நாள் | தகுதிகாண் பருவம் நிறைவு செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | திரு. எஸ். குழந்தைவேல் உதவிப்பொறியாளர் | 13.5.69 | 4.6.2001 முற்பகல் | 4.6.2001 முற்பகல் | 3.6.2003 பிற்பகல் | பகுதி – I 30.5.05 பகுதி – II 31.5.05 | 1.6.2005 முற்பகல் |

மேற்படி உதவிப் பொறியாளருக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தேதிகளில் பணிவரன்முறைப்படுத்தியும், தகுதிகாண் பருவம் நிறைவு செய்து முடித்ததாக அறிவிக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 555</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## <u>18) ம.நி.5 / 01016 / 2006</u>

மதுரை மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள இராணிமங்கம்மாள் சத்திரம் கண்காணிப்பாளருக்கு அலுவல் முன் பணம் (Imprest) ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிர்ணயம் செய்யப்பட்டு, கம்பிவடம், தொகை மாதம் ஒருமுறை ரூ.1,000/- 15 தினங்களுக்கு ஒருமுறை வாசைன திரவியம் ரூ.1,000/- இதுதவிர சில்லரைச் செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ள நிலையில், உடனுக்குடன் பராமரிப்புப் பணியினை மேற்கொள்வதற்கும், இன்னும் இராணிமங்கம்மாள் சத்திரத்திற்கு நவீன வசதிகள் செய்துதர அலுவல் முன்பணத் தொகை ரூ.1000/-லிருந்து ரூ.2,000/- (இரண்டாயிரம் மட்டும்) உயர்த்தி நிர்ணயம் செய்யக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 556</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## <u>19) ம.ந.3 / 00162/ 2006</u>

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரம் பிரிவில் பணிபுரிந்து வரும் துப்புரவு ஊழியர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையரின் 100 அம்சத் திட்டத்தின் கீழ் ஒளிரும் பட்டையுடன் கூடிய மஞ்சள் / ஆரஞ்சு கலர் டி-சர்ட் ஜாக்கெட் மற்றும் தலைக்கவசம் வழங்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி துப்புரவு ஊழியர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் துப்புரவு பணிகளை சுகாதாரமான முறையில் மேற்கொள்ளும் பொருட்டு ஒளிரும் பட்டையுடன் கூடிய மஞ்சள் / ஆரஞ்சு கலர் டி-சர்ட், ஜாக்கெட் மற்றும் தலைக்கவசம் ஆகியவற்றை வாங்கி வழங்குவதற்கும் அதற்கான தோராய செலவினத் தொகை ரூ.11,00,000/-ஐ மாநகராட்சி பொது நிதியில் இருந்து வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 557</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## <u>20) ம.பொ.9 / 38561/ 2005</u>

மதுரை மாநகராட்சி பகுதிகளில் குடிநீர் மெயின் இல்லாத பகுதிகளுக்கு குடிநீர் லாரிகள் மூலம் 01.03.2006 முதல் 31.12.2006 வரை உள்ள காலத்திற்கு தனியார் லாரிகள் மூலம் சப்ளை செய்ய மாமன்றத்தின் தீர்மானம் எண்.470, நாள். 28.12.2005-ன்படி நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு 24.01.2006ம் தேதி டெண்டர் வரவழைக்கப்பட்டதில் கலந்து கொண்ட இரண்டு டெண்டர்தாரர்களில் M/s.Jeyvarshini Transport, Chennai அவர்கள் லாரி ஒன்றுக்கு நடை 1-க்கு Rs.272/- (Two Hundred and seventy two only) என கொடுத்துள்ள விலை விகிதம் டெண்டர் மதிப்பீட்டு ஆய்வுக்குழு கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு வேலை உத்திரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 558</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## <u>21) ம.பொ.9 / 12477/ 2005</u>

மதுரை மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் முழுமையாக செயல்படுத்த 2ம் கட்ட குப்பை சேகரிப்பு பணிக்கு தேவையான வாகனங்கள் வாங்க மாமன்றத்தில் (தீர்மானம் எண்.12, நாள். 01.04.2005) ஒப்புதல் பெறப்பட்டு அதன்பேரில் நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் Roc.No.22494/2005 MC B3 நாள். 18.04.2005ம் தேதிய கடிதத்தில் நிர்வாக அனுமதியும், திடக்கழிவு

மேலாண்மைக்கு தேவையான வாகனங்களை வாங்க தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதித்துறை மூலம் கடன் பெறவும் தெரிவிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதித்துறையில் ரூ.273.60 லட்சம் கடனாகவும், ரூ.136.80 லட்சம் மானியமாகவும் மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதன்பேரில், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த குப்பை அள்ளும் பணிக்கு தேவையான பொக்லைன் வாகனம் 1 எண்ணம் வாங்க 02.11.2005ம் தேதியில் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற மூன்று நிறுவனங்களின் தொழில்நுட்பம் சான்றுகள் மற்றும் விலைப்புள்ளிகளை வாகனங்கள் வாங்கும் அலுவலர்கள் ஆய்வுக்குழு கமிட்டியில் பரிசீலிக்கப்பட்டு M/s. ஜெயராஜ் ஆட்டோமோபைல்ஸ் ஏஜென்ஸி (1 ஜெயராஜ் நகர் பாத்திமா கல்லூர் எதிர்புறம், மதுரை-18) நிறுவனத்தாரின் ரூ.23,75,000/- (ரூபாய் இருபத்தி மூன்று லட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) க்கான விலைப்புள்ளி ஏற்றுக்கொள்ள முடிவு செய்யப்பட்டு உள்ளது. அதன்பேரில் விலைப்புள்ளிக்கான "விலைப்புள்ளி மதிப்பாய்வு அறிக்கை" (Quotation Evaluation Report) தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதித்துறை சென்னை அவர்களுக்கு அனுப்பியதில் 23.01.2005ம் தேதிய கடிதத்தில் M/s. ஜெயராஜ் ஆட்டோமோபைல்ஸ் ஏஜென்ஸி மதுரை நிறுவனத்தாரின் சப்ளை பெற்றுக்கொள்ள சிபாரிசு வழங்கப்பட்டு உள்ளது.

திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் செயல்படுத்த குப்பை அள்ளும் பணிக்கு தேவையான பொக்லைன் ஒன்றினை M/s. ஜெயராஜ் ஆட்டோமோபைல்ஸ் ஏஜென்ஸி மதுரை நிறுவனத்தாரின் ரூ.23,75,000/- விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளவும், சப்ளை உத்திரவு வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக்கு கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 559**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 22) ம.ந.2 / 15425 / 2001

மதுரை மாநகராட்சியில் அங்கீகரிக்கப்பட்ட மாநகராட்சி மயானத்தில் பணிபுரியும் மயான ஊழியர்களுக்கு கூலி நிர்ணயம் செய்வது சம்பந்தமாக அமைக்கப்பட்ட குழு 1.2.2006 பிற்பகல் 4.00 மணிக்கு கூடி மயான ஊழியர்களின் தரப்பில் நியாயங்களை கேட்டு புதிய கூலி நிர்ணயம் செய்து மாமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்க முடிவு செய்யப்பட்டது.

***" வானத்தின் மழைத்துளி – வையகத்தின் உயிர்த்துளி "***

குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூலி விபரம் வருமாறு

| வரிசை எண். | விபரம் | பெரியவர் | சிறியவர் |
|---|---|---|---|
| 1. | விறகு நான்கு தூக்கு விலை | ரூ. 175/- | ரூ. 88/- |
| 2. | எருவாட்டி 400 எண்ணிக்கை விலை | ரூ. 120/- | ரூ. 60/- |
| 3. | பச்சைதட்டி, மண்ணெண்ணெய் விலை | ரூ. 110/- | ரூ. 55/- |
| 4. | கீழே வைத்து எரிப்பதற்கு மண்சட்டி விலை | ரூ. 70/- | ரூ. 35/- |
| 5. | இதனை ஏற்றிவரும் வண்டி வாடகை | ரூ. 50/- | ரூ. 25/- |
| 6. | ஒரு பிணம் எரிப்பதற்கு மூன்று பணியாளர்களின் சம்பளம் | ரூ. 375/- | ரூ. 187/- |
| 7. | ஒரு பிணம் எரிப்பதற்கு மொத்த செலவு | **ரூ. 900/-** | **ரூ. 450/-** |
| 8. | ஒரு பிணம் புதைப்பதற்கு மூன்றுபேர் சம்பளக்கூலி | ரூ. 400/- | ரூ. 200/- |

புதிய கூலி நிர்ணயத்தை ஏற்கவும், மயானங்களில் அறிவிப்பு பலகை மூலம் பொது மக்களுக்கு தகவல் தெரிவிப்பதற்கும் மாமன்றத்தின் அனுமதி கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 560**

**பிணம் எரிப்பதற்கு மொத்த செலவு பெரியவருக்கு ரூ.500/-, சிறியவருக்கு ரூ.300/- என்றும் பிணம் பிதைப்பதற்கு மூன்றுபேர் சம்பளக்கூலி பெரியவருக்கு ரூ.300/-, சிறியவருக்கு ரூ.100/- என குறைத்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 23) ம.தி.2 / 16632/ 2005

மதுரை மாநகராட்சி மாடக்குளம் கிராமம் உள்கடை பழங்காநத்தம் ரீசர்வே எண்.32 / 3 பி-ல் கண்டுள்ள "பிபி" திட்டச் சாலைக்காக 0.08 சென்ட் இடம் (தற்போது நகர்புல எண்.45) டி.வி.எஸ். பள்ளிக்கு செல்லும் தென்வடல் ரோடாக உள்ள இடத்திற்கு மாற்று இடம் வழங்கக் கோரிய திருமதி. எஸ்.ஜைபுனிஷா என்பவரின் மனுவின்பேரில் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் மாமன்றம் தனது 1.9.2005ம் தேதிய 281 எண் தீர்மானத்தில் மாற்று இடமாக 8 சென்ட் இடத்தினை ஷை புல எண்ணில் தற்போதுள்ள சமுதாயக் கூடத்திற்கு அருகே வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மாமன்றத்தீர்மானத்தின்படி டி.வி.எஸ். பள்ளிக்கு அருகில் பூங்காவின் சுவரை இடித்து அகற்றி மனுதாரருக்கு இடத்தை ஒப்படைக்க வேண்டியதை தவிர்க்கும் பொருட்டு தற்போது சுற்றுச்

சுவருக்கு வெளியிலுள்ள 1048 சதுர அடி இடமும் மீதமுள்ள 2436 சதுர அடி இடத்தை (மொத்தம் 8 செண்ட் இடம்) மாடக்குளம் கிராமம் ஆர்.எஸ்.எண். 99 / 4பி-ஐக் கொண்ட வெங்கடாச்சலபுரம் ரோட்டில் காலியாக உள்ள பூங்காவில் கொடுக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 561**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 24) ம.பொ. 5/ 36629/ 2005

மதுரை மாநகராட்சி ஆடுவதை செய்யுமிடம் மாறுதல் செய்வது சம்பந்தமாக சுகாதார குழு கேட்டுக்கொண்டபடி மதுரை மாநகராட்சி பகுதியில் மேலும் மூன்று இடங்களை பார்வையிடப்பட்டது

01) ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் பின்புறம்

02) எல்லீஸ்நகர் வீட்டுவசதிவாரியம் குடியிருப்பு பின்புறம்

03) சுடலைமுத்துபிள்ளை சந்து ஆகிய இடங்கள்

இதில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் பின்புறம் உள்ள பகுதி பேருந்துநிலைய விஸ்தரிப்பிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. எல்லீஸ் நகர் வீட்டுவசதி வாரிய குடியிருப்பு பின்புறம் உள்ள இடம் மற்றும் சுடலைமுத்துபிள்ளை சந்து (ஆக்கிரமிப்பு செய்துள்ள இடம்) ஆகியவற்றிக்கு சுகாதார அதிகாரி அவர்களின் குறிப்பு பெறப்பட்டுள்ளது.

மேற்படி இடத்தில் ஆடுவதை கூடம் அமைப்பதில் ஆடுவதை சட்டத்திற்குரிய பொதுவான சுகாதார கேட்டைத் தவிர குறிப்பிடத்தக்க சுகாதார கேடு ஏற்படவாய்ப்பு இல்லை என குறிப்பு கொடுத்துள்ளார்கள். இத்தகவலை மாமன்றத்தின் பார்வைக்கும் மேல் உத்திரவிற்கும் வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 562**

**சுகாதாரக்குழு இடத்தை பார்வையிட்டதில், சுடலைமுத்துபிள்ளை சந்து போதிய சுகாதார வசதி இல்லாத இடம் என கூறியுள்ளதாலும் மற்றொரு இடமான எல்லீஸ் நகர் பகுதி அனைத்து குடியிருப்பு நலச்சங்களும் ஆட்சேபணை தெரிவிப்பதாலும், சுற்றுப்புறச்சூழல் மற்றும் மாசுக்கட்டுபாடு பாதிக்க வண்ணம் வேறு மாற்று இடம் தேர்வு செய்து சரியான விபரங்களுடன் மீண்டும் பரிசீலித்து பொருள் வைக்கவும்.**

## 25) ம.பொ.4/ம.எண்.515/2005

மதுரை மாநகராட்சி உள்வட்டச் சுற்றுச்சாலை கி.மீ. 10/2 to 11/0, 15/6 to 16/0, 16/2 to 16/6 மற்றும் 17/4 to 17/8 வரையிலான தார்சாலை புதுப்பிக்கும் வேலைக்கு ரூ.24,95,000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நகரப் பொறியாளரின் தொழில்நுட்ப அனுமதியும், நிர்வாக ஒப்புதலுக்கு ஆணையாளரின் ஒப்புதலும் வணக்கத்திற்குரிய மேயரின் முன் ஒப்புதலும் பெற்று டெண்டர் வரவழைக்கப்பட்டதில், மூன்று டெண்டர்கள் பெறப்பட்டு, அதில் திரு.எம்.கருப்பசாமி, 13 வாஞ்சிநாதன் தெரு, அண்ணாநகர், மதுரை-20 என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 1% குறைத்து வேலை செய்துத்தர சம்மதம் தெரிவித்துக் கொடுக்கப்பட்ட டெண்டரை ஏற்பு செய்வது தொடர்பாக மதிப்பாய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில், மேற்கண்ட டெண்டரை ஏற்பு செய்ய மதிப்பாய்வு குழுவில் தீர்மானிக்கப்பட்டது. மேற்கண்ட முன் ஒப்புதல் பெறப்பட்ட நிர்வாக ஒப்புதலுக்கு பின்னேற்பு ஒப்புதல் கோரியும், மதிப்பாய்வு குழுவில் ஏற்பு செய்த டெண்டரை ஏற்பு செய்து, ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 563**

**பின்னேற்புடன் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 26) ம.பொ.8/ம.எண்.228/2005

மதுரை மாநகராட்சி வார்டு எண்.19ல் தேசிய குடிசை மேம்பாட்டுத் திட்டத்தில் (என்.எஸ்.டி.பி.) மீனாம்பாள் புரத்தில் உள்ள சத்தியமூர்த்தி 1 முதல் 6 தெருக்களுக்கு சிமிண்ட் கான்கிரீட் சாலை அமைக்க ரூ.19,60,000/-க்கு (ரூபாய் பத்தொன்பது லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) 2004-05ம் ஆண்டு விலை விகிதப்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று (மாமன்றத் தீர்மானம் எண். 175, நாள். 6.7.2005) டெண்டர் வரவழைக்கப்பட்டது. 18.1.2006ம் தேதி வரப்பெற்ற இரண்டு டெண்டர்கள் மதிப்பாய்வு குழுவின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, இரண்டு டெண்டர்களில் மதிப்பீடு விகிதத்திற்கு 2.10% குறைவாக குறிப்பிட்டு இருந்த திரு.எம்.வேலுச்சாமி ஒப்பந்ததாரரின் டெண்டரை ஏற்பு செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது. திரு.எம்.வேலுச்சாமி ஒப்பந்ததாரரின் டெண்டரை ஏற்பு செய்து வேலை உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 564**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**27) ம.பொ.8/ம.எண்.209/2005**

மதுரை மாநகராட்சி வார்டு எண்.18ல் தேசிய குடிசை மேம்பாட்டுத் திட்டத்தில் (என்.எஸ்.டி.பி.) அகிம்சாபுரம் பகுதிகளில் சிமிண்ட் கான்கிரீட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் வாய்க்கால் கட்டுவதற்கு ரூ.16,00,000/-க்கு (ரூபாய் பதினாறு லட்சம் மட்டும்) 2004-2005ம் ஆண்டு விலை விகிதப்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று (மாமன்றத் தீர்மானம் எண். 175, நாள். 6.7.2005) டெண்டர் வரவழைக்கப்பட்டது. 22.12.2005ம் தேதி வரப்பெற்ற இரண்டு டெண்டர்கள் மதிப்பீடு விகிதத்தில் 0.47% குறைவாக குறிப்பிட்டு இருந்த திரு.எஸ்.நெடுமாறன் ஒப்பந்ததாரரிடம் மதிப்பீடு விகிதத்திற்கு 1% விலை குறைத்து செய்ய சம்மதக் கடிதம் பெற்று, மதிப்பாய்வு குழுவின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அன்னாரின் டெண்டரை ஏற்பு செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது. திரு.எஸ்.நெடுமாறன் ஒப்பந்ததாரரின் டெண்டரை ஏற்பு செய்து வேலை உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 565**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**28) ம.பொ.3 (ம.பொ.9) / ம.எண். 811/ 2005**

மதுரை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண்.66 இ.பி.காலனி மெயின் ரோடு முத்துராமலிங்கபுரம் பகுதிகளுக்கு புதிய குடிநீர் மெயின் அமைக்கும் பணிக்கு ரூ.19.50 லட்சத்திற்கு மதிபபீடு தயார் செய்யப்பட்டு, மாமன்றத் தீர்மானம் எண்.218, நாள். 1.8.2005-ன்படி நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு, 6.9.2005-ம் தேதிய டெண்டர் வரவழைக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில், மெசர்ஸ். ஸ்ரீ அரோபிந்தோ கன்ஸ்ட்ரக்சன்ஸ், மதுரை (Sri Aurobindo Constructions, Madurai) மதிப்பீடு விலையிலிருந்து (-)0.52% குறைவாக கொடுத்துள்ள டெண்டர் ஏற்றுக் கொள்ளப்பட்டு, வேலை உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 566**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**29) ம.ந.6/26637/2004**

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கடிதம் ந.க.எண். 102960/2005 கு.பொ.1, நாள். 21.12.2005 மற்றும் 23.12.2005ன் படி அந்தியோதியா அன்னயோஜனா திட்டம்-3ன் கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகளுக்கு ஒரு கிலோ அரிசி ரூ.3/- விலையில் மாதம் 35 கிலோ அரிசி வழங்குவதற்கு மதுரை மேற்கு குடிமை பொருள் சரக வட்டாட்சியர் 500 பயனாளிகளையும், மதுரை வடக்கு சரகம் குடிமை பொருள் வட்டாட்சியர் 500 பயனாளிகளையும் தேர்வு செய்து, பயனாளிகளின் பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பயனாளிகளின் பட்டியல் மாமன்ற ஒப்புதல் பெற்று அனுப்பி வைக்க கோரப்பட்டுள்ளது. அதன்பேரில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் முன் ஒப்புதல் பெற்று, என்.ஓ.சி. (தடையில்லா சான்று) மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டதை மாமன்றத்தின் பின்னேற்பிற்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 567**
**பின்னேற்புடன் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**30) ம.ந.6/01207/2006**

நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் செயற்குறிப்பு கடிதம் எண். 20812/2005 யு.பி.எப் - 2, நாள். 21.10.2005 மற்றும் 15.12.2005ன்படி பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் மகளிர் சிக்கன மற்றும் நாணய சங்கத் திட்டத்தின் கீழ் சுழல் நிதி வழங்குவதற்கு, மதுரை மாநகராட்சிக்கு 2005-2006 ஆம் ஆண்டிற்கு நிதி ரூ.17.13 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தம் 86 மகளிர் சிக்கன மற்றும் நாணய சங்கங்களுக்கு சுழல் நிதி வழங்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி முதல் கட்டமாக ஒரு ஆண்டுக்கு மேல் நிறைவு பெற்றுள்ள 47 மகளிர் சிக்கன மற்றும் நாணய சங்கங்களுக்கு 9.40 லட்சம் வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 568**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**31) ம.நி.1/37898/2005**

அரசாணை எண். 237, நகராட்சி நிர்வாகம் & குடிநீர் வழங்கல்துறை நாள். 26.6.96-ல் தோற்றுவிக்கப்பட்ட புதிய பணிவிதிகள் மற்றும் அரசாணை எண். 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 12.5.98ல் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் (Cadre Strength) மதுரை மாநகராட்சியில் ஒரு மக்கள் தொடர்பு அலுவலர் பணியிடம் மட்டும் அனுமதிக்கப்பட்டு, அயற்பணியின் கீழ் நியமிக்கப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளது. தற்போது மதுரை மாநகராட்சியில் பல்வேறு நலத்திட்டங்கள்

நடைபெற்று வருவதால், ஒரு உதவி மக்கள் தொடர்பு அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கக் கோரி அரசுக்கு பிரேரணை அனுப்பியதில், நகராட்சி நிர்வாக ஆணையாளர் அலுவலக கடிதம் ந.க.எண். 6201/2006 / மாநாஅ.1, நாள். 3.2.2006-ல் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் பணியிடம் தோற்றுவிக்க நியமனக்குழுத் தீர்மானம் விபரம் மற்றும் இந்தப் பணியிடம் தோற்றுவிக்க அவசரம் அவசியம் குறித்த விரிவான அறிக்கை அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

25,78,201 மக்கள் தொகை கொண்ட மதுரை மாவட்டத்தில், மதுரை மாநகராட்சி பகுதி மக்கள் தொகை மட்டும் 9,28,869 போக மீதமுள்ள 16,49,332 மக்கள் தொகையுடன் உள்ள மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒரு மக்கள் தொடர்பு அலுவலருடன் கூடுதலாக இரண்டு உதவி மக்கள் தொடர்பு அலுவலர் பணியிடங்கள் உள்ளன. 9,28,869 மக்கள் தொகை கொண்ட மதுரை மாநகராட்சி பகுதியில் ஒரு மக்கள் தொடர்பு அலுவலர் பணியிடம் மட்டுமே இருந்து வருகிறது. மேலும் தற்போது மதுரை மாநகராட்சியில் அமுல்படுத்தப்பட்டு வரும் சொர்ண ஜெயந்தி திட்டம் (SJSRY) திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் (Solid Waste Management) மற்றும் பல்வேறு நலத்திட்டங்களின் செயல்பாடுகள் பற்றிய விபரங்கள், பயன்கள் மக்களைச் சென்றடைய ஒரு மக்கள் தொடர்பு அலுவலர் பணியிடம் மற்றும் போதுமானதாக இல்லை என்பதால், இந்த பணிகளை நன்கு கவனிக்க கூடுதலாக ஒரு உதவி மக்கள் தொடர்பு அலுவலர் பணியிடம் தோற்றுவிப்பது அவசியம் என கருதப்படுகிறது. இந்நிலையில் மக்கள் தொடர்பு அலுவலர் கல்வி தகுதி பெற்ற பணிமூப்புடைய 5500-175-9000 என்ற சம்பள விகிதத்தில் உள்ள திரு.ஆர்.ஜே.ஏ.ரவீந்திரன் சிறப்பு நிலை உதவியாளர், தன்னை உதவி மக்கள் தொடர்பு அலுவலராக நியமிக்கக் கோரி 6.2.2006 அன்று மனு செய்துள்ளார். இவர் மக்கள் தொடர்பு அலுவலருக்கான முழு கல்வித் தகுதியும் பெற்றுள்ளார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலரின் சம்பள விகிதம் 5900-200-9000 ஆகும். திரு.ஆர்.ஜே.ரவீந்திரன் சிறப்பு நிலை உதவியாளரை, உதவி மக்கள் தொடர்பு அலுவலராக பணி உயர்வு செய்யும் போது, அவர் ஏற்கனவே அடிப்படைச் சம்பளம் ரூ.6900 + PP 50 + PP 288 பெற்று வருவதால், கூடுதலாக ஒரு ஊதிய உயர்வு மட்டுமே இவருக்கு கிடைக்கும். புதியதாக ஒரு உதவி மக்கள் தொடர்பு அலுவலர் பணியிடம் தோற்றுவிப்பதால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சியே ஏற்றுக் கொள்ளலாம்.

எனவே வளர்ந்து வரும் மதுரை மாநகராட்சியில் நடைபெற்றுவரும் சொர்ண ஜெயந்தி திட்டம் (SJSRY) திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் (Solid Waste Management) கணினி மயமாக்கப்பட்ட மாநகராட்சி பணிகள் மற்றும் பல்வேறு நலத்திட்டப் பணிகளின் பயன்கள் மக்களைச் சென்றடைய மதுரை மாநகராட்சியில் ஏற்கனவே இருந்து வரும் மக்கள் தொடர்பு அலுவலர் பணியிடத்துடன், 5900-200-9000 என்ற ஊதிய விகிதத்தில் கூடுதலாக ஒரு உதவி மக்கள் தொடர்பு அலுவலர் பணியிடத்தை தோற்றுவிக்க அரசைக் கேட்டுக் கொள்ளவும், புதிதாக தோற்றுவிக்கப்படும் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் பணியிடத்தில் திரு.ஆர்.ஜே.ஏ.ரவீந்திரன் சிறப்புநிலை உதவியாளரை நியமிக்க இவரது மனுவை அரசுக்கு பரிந்துரை செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 569</u>**

**அனுமதிக்கப்பட்ட பணி இடங்களில் ஒரு பணியிடத்தினை A.P.R.O ஆக தகுதி உயர்வு செய்து இவரை பணியில் அமர்த்தி அரசின் பின்னேற்பு பெற வேண்டியது.**

**(ஒம்...) செ. இராமச்சந்திரன்**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 15.2.2006**

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2006**ம் ஆண்டு **பிப்ரவரி** திங்கள் **22-ம்** நாள் **புதன்கிழமை** காலை **12.30** மணிக்கு

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## <u>அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்</u>

1) **<u>ம.நி.1 /19331 / 2005</u>**

தமிழ்நாடு கட்டுமான கழகத்தில் நியமனம் செய்யப்பட்டு அயற்பணியின்கீழ் தமிழ்நாடு குடிமைப்பொருள் வழங்கல் துறை உதவிப் பொறியாளராக பணியாற்றி வந்த திருமதி.ஆர்.ஜெயா என்பவரை மதுரை மாநகராட்சியில் உதவிப் பொறியாளராக நியமனம் செய்து பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணை (டி) எண். 44, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (MC IV) துறை நாள். 10.2.2006 ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 570</u>**
**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

2) **<u>பி.11/ 04275 / 2006</u>**

மதுரை மாநகராட்சியில் பணிபுரிந்து ஓய்வுபெற்றுள்ள ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்டுவரும் அடிப்படை ஓய்வூதிய தொகையுடன் தற்போது வழங்கப்பட்டு வரும் அகவிலைப்படி 71% ல் 50% அகவிலைப்படி தொகையை சேர்த்து வழங்க, அரசாணை எண். 105 / 7.2.2006 Finance (Paycell Dept.,) ல் ஆணை வரப்பெற்றுள்ளது. மேற்காணும் அரசாணையின்படி 1.1.2006 முதல் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு வழங்க வெளியிடப்பட்டுள்ள அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 571</u>**
**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

3) **<u>மே.ம.வ.4 / 1279 / 2005</u>**

மதுரை மாநகராட்சி 68வது வார்டு க.எண்.1 அருள்நகர் (பசும்பொன் தேவர் தெரு) சொத்துவரி விதிப்பு எண். 319284, சுவான்தார் திருமதி. பிலோமினா க / பெ. எஸ்.ஆண்டித்தேவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வீடு வார்டு 68ல் 141, திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதியை சார்ந்தது. இந்நிலையில் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் உத்தரவின்பேரில் மதுரை தெற்கு தாசில்தார் மற்றும் உதவி ஆணையாளர் (தெற்கு) அவர்களும் சேர்ந்து 20.4.2005ல் கூட்டு ஸ்தல நேராய்வு செய்து 141, திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆண்டித்தேவர் அவர்கள் மனைவி திருமதி.பிலோமினா பெயரில் உள்ள க.எண்.1 அருள்நகர் (பசும்பொன்தேவர் தெரு) வீடு வார்டு 68ல் தவறுதலாக வீட்டுவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளதை கண்டறியப்பட்டது.

மேலும் திரு.எஸ். ஆண்டித்தேவர் மற்றும் குடும்பத்தினர் வாக்காளர் பதிவு விபரங்கள் வார்டு 29ல் பாகம் 41ல் இடம் பெறுமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. வார்டு 68, க.எண்.1 அருள்நகர் தவறுதலாக வரிவிதிப்பு செய்யப்பட்டதை ரத்து செய்து மேற்படி வரிவிதிப்பை வார்டு 29-க்கு மாற்றி அமைத்து கொள்ளுமாறு உதவி பதிவு அலுவலர் மற்றும் உதவி ஆணையாளர் (தெற்கு) 21.4.2005ந் தேதிய கடிதம் எண். தெ.ம.பொ.6/ 8830 / 2005 மூலம் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து அன்னாரின் சொத்துவரி விதிப்பு எண். 319284-யை வார்டு 68-லிருந்து வார்டு 29-க்கு 27.4.2005ல் மாற்றம் செய்யப்பட்டது.

மனுதாரர் திருமதி. ஏ. பிலோமினா க/பெ. எஸ்.ஆண்டித்தேவர் அவர்கள் 5.7.2005ம் தேதிய விண்ணப்பத்தில் மேற்படி சொத்துவரி விதிப்பு எண். 319284-யை க.எண்.1 அருள்நகர் வார்டு 29-லிருந்து 68-க்கு மாற்றம் செய்யுமாறு கோரினார். அன்னாரின் ஆட்சேபணை மனுவின் பேரில் உதவி ஆணையாளர் (மேற்கு) அவர்கள் நேராய்வு செய்து அறிக்கை மற்றும் முதன்மை நகரமைப்பு அலுவலர் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையிலும், சர்வே ஆவணங்களின் அடிப்படையிலும்

*"நீரின்றி உலகில்லை – உலகம் செழிக்க மழைநீரை சேமிப்போம் "*

பட்டியலில் சேர்க்க கோரி, மதுரை மாவட்ட ஆட்சித்தலைவருக்கு ஆணையாளர் மூலம் கடிதம் அனுப்பப்பட்டதின் பேரில் மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 27.7.2005ம் தேதிய ந.க.எண். டி1/ 75685/05, எண்ணிட்ட கடிதத்தின் ஆணையின்படி சர்வே எண். 224 / 4, 5ல் உள்ள பகுதி வீடுகளில் குடியிருக்கும் வாக்காளர் பெயர்களை (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. 143, மதுரை மத்திய சட்டமன்ற தொகுதி) நீக்கம் செய்யப்பட்டு திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதி பாகம் 61-ல் வார்டு 68-ல் சேர்க்கப்பட்டதற்கும் பட்டியலில் உள்ள 16 வீடுகளையும் மற்றும் வாக்காளர்களையும் வார்டு 29-லிருந்து வார்டு எண். 68-க்கு மாற்றம் செய்ப்பட்டதற்கும் மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**வார்டு - 29 எல்லீஸ்நகர் 20 அடி Extension**

| வ.எண். | வரிவிதிப்பு எண். | கதவு எண். | பெயர் |
|---|---|---|---|
| 1 | 319284 | 1 | பிலோமினா W/o. ஆண்டித்தேவர் |
| 2 | 307878 | 2 | பி. அமிர்தம் |
| 3 | புதியது | - | பூட்டப்பட்டுள்ளது. |
| 4 | புதியது | 3 | எஸ். ஜெயகுமார் |
| 5 | புதியது | 4 | கணேஷ் |
| 6 | புதியது | 5 | இளங்கோவன் |
| 7 | புதியது | 6 | எஸ். தமிழ்செல்வி |
| 8 | 317397 | 3 | திருமூர்த்தி |
| 9 | 329656 | 1A | சையது ரகமதுல்லா |
| 10 | 315912 | 2 | சரோஜா |
| 11 | 315911 | 1 | பால்ராஜ் |
| 12 | புதியது | 23 / 6.7.8 | நீண்டகாலமாக காலியாக உள்ளது. |
| 13 | 328721 | 2-A | முத்தையா |
| 14 | புதியது | 21 | பூட்டப்பட்டுள்ளது. |
| 15 | 316323 | 17A | நாராயணன் ரெங்கநாயகி |
| 16 | 311015 | 14 | என். சேகர் |

**மாமன்ற தீர்மானம் எண் : 572**

**குறிப்பு பதிவு செய்யப்பட்டது.**

## 4) எச்.எப்.1 / 01770 / 2006

மதுரை மாநகராட்சி நலவாழ்வு மையம்-2, செல்லூர் மையத்தில் பணிபுரிந்து வரும் திருமதி. இ. பஞ்சவர்ணம், பலநோக்கு சுகாதாரப் பணியாளர் அவரது குடும்ப சூழ்நிலை காரணமாக, விருதுநகர் நகராட்சிக்கு ஒருவழிப் பணிமாறுதல் செய்யக்கோரி மனு செய்துள்ளதின் பேரில், அவரை விருதுநகர் நகராட்சிக்கு ஒருவழிப் பணிமாறுதல் செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :**
1) மேற்படி ஒருவழிப் பணிமாறுதல் அரசின் உரிய ஆணை பெற்ற பின்னரே ஏற்கப்படும்.
2) மேற்படி ஒருவழிப் பணிமாறுதல் தொடர்பாக பயணப்படி எதுவும் வழங்கப்படமாட்டாது.

**மாமன்ற தீர்மானம் எண் : 573**

**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 5) ம.நி.2 / 19757/ 2003

மதுரை மாநகராட்சியில் நேரடி நியமனம் மூலம் பணியமர்த்தப்பட்ட திரு. ஆர்.அலெக்சாண்டர், உதவிப் பொறியாளர் தனது பணிக்காலத்தை வரன்முறைப்படுத்தவும், தகுதிகாண் பருவம் நிறைவு செய்து அறிவிக்கவும் கோரியுள்ளார். 1996–ல் பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு மாநகராட்சிப் பணிவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளின்படி தொடர்ச்சியான மூன்று ஆண்டுகாலப் பணியில், இரண்டு ஆண்டு காலம் தகுதிகான் பருவம் முடிப்பதற்குள்ளாக பொதுப்பணித்துறை சார்நிலைப் பணி தொகுதி – 2 கணக்குத் தேர்வு பகுதி 1 மற்றும் 2 (PWD Subordinate Service's Class-II – Account Test Part I & II) ஆகிய துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். திரு. ஆர்.அலெக்சாண்டர், உதவிப் பொறியாளர் தகுதிகான் பருவத்திற்குள்ளாக தேர்ச்சி பெறாததால், பணிவிதி அறிவுரைகளின்படி மேலும் ஓராண்டு காலக்கெடு நீட்டித்து அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து கீழ்கண்ட தேதிகளில் தேர்ச்சி பெற்று பணிவிதி நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ளார். எனவே இவருக்கு கீழ்க்கண்டவாறு பணி ஒழுங்குப்படுத்தியும், கணக்குத் தேர்வு தேர்ச்சி பெற்ற (Account Test) கடைசி நாளுக்கு அடுத்த தினத்திலிருந்து தகுதிகான் பருவம் நிறைவு செய்ததாக அறிவிக்கவும் வேண்டியுள்ளது.

| வ. எண். | பெயர் , பதவி | பிறந்த தேதி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறைபடுத்திய மற்றும் தகுதி காண் பருவம் தொடங்கிய நாள் | தகுதிகாண் பருவம் நிறைவு செய்ய வேண்டிய நாள் | கணக்குத் தேர்வு தேர்ச்சி பெற்ற நாள் | தகுதி காண் பருவம் நிறைவு செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| **1.** | திரு.ஆர்.அலெக்சாண்டர் உதவிப்பொறியாளர் | **1.6.1969** | **4.6.2001** முற்பகல் | **4.6.2001** முற்பகல் | **3.6.2003** பிற்பகல் | பகுதி – I **30.12.04** பகுதி – II **31.5.05** | **1.6.2005** முற்பகல் |

***"அகழிகள் இன்றில்லை – அகன்ற கிணற்றை அகழியாக்குவோம் "***

மேற்படி உதவிப் பொறியாளருக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தேதிகளில் பணிவரன்முறைப்படுத்தியும், தகுதிகாண் பருவம் நிறைவு செய்து முடித்ததாக அறிவிக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 574</u>**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 6) <u>ம.பொ.8/ 04707 / 2006</u>

மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தேசிய குடிசை அபிவிருத்தி திட்டத்தின் (N.S.D.P) கீழ் புதிதாக குழல் விளக்குகள் அமைக்க மின்வாரியத்தில் விண்ணப்பங்கள்பதிவு செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் டியூப்லைட் பிட்டிங்குகள் மின்வாரியத்திடம் கொடுக்க வேண்டியுள்ளது. இதற்காக 1500 எண்கள் டியூப்லைட் பிட்டிங்குகள் தேவைப்படுகிறது.

கொள்முதல் செய்ய உத்தேச செலவின தொகை ரூ.17,25,000/- ஆகும். எனவே டியூப்லைட் பிட்டிங்குகள் முன்னணி நிறுவனங்களிடமிருந்து டெண்டர் வரவழைத்து கொள்முதல் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 575</u>**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 7) <u>ம.பொ.8 / 04708 / 2006</u>

மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தேசிய குடிசை அபிவிருத்தி திட்டத்தின் (N.S.D.P) கீழ் புதிதாக சோடியம் விளக்குகள் அமைக்க மின்வாரியத்தில் விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் 250W சோடியம் பிட்டிங்குகள் மின்வாரியத்திடம் கொடுக்க வேண்டியுள்ளது, இதற்காக 400 எண்கள் 250W சோடியம் பிட்டிங்குகள் தேவைப்படுகிறது.

கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.17,80,000/- ஆகும். எனவே 250W சோடியம் பிட்டிங்குகள் முன்னணி நிறுவனங்களிடமிருந்து டெண்டர் வரவழைத்து கொள்முதல் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 576</u>**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 8) <u>ம.பொ.8 / 04709 / 2006</u>

மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தேசிய குடிசை அபிவிருத்தி திட்டத்தின் (N.S.D.P) கீழ் புதிதாக சோடியம் விளக்குகள் அமைக்க மின்வாரியத்தில் விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் 150W சோடியம் பிட்டிங்குகள் மின்வாரியத்திடம் கொடுக்க வேண்டியுள்ளது. இதற்காக 550 எண்கள் 150W சோடியம் பிட்டிங்கள் தேவைப்படுகிறது,

கொள்முதல் செய்ய உத்தேச செலவின தொகை ரூ.22,27,500/-ஆகும். எனவே 150W சோடியம் பிட்டிங்குகள் முன்னணி நிறுவனங்களிடமிருந்து டெண்டர் வரவழைத்து கொள்முதல் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 577</u>**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 9) B 30 / 05093 /06

மதுரை மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு 2006–2007ம் ஆண்டிற்கு தேவையான தெருவிளக்கு மின் உபகரணங்கள் கீழ்கண்ட விபரப்படி கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| Sl.No | Name of Materials | Qty |
|---|---|---|
| 1 | 70 W SVL Holder | 500 |
| 2 | 150 w / 250w SVL Holder | 1000 |
| 3 | 2.5sqmm aluminium wire | 900 |
| 4 | 6 sqmm aluminium wire | 500 |
| 5 | 10 sqmm aluminium wire | 50 |
| 6 | 25 sqmm aluminium wire | 100 |
| 7 | 3/20 Copper Wire | 500 |
| 8 | 7/20 Copper Wire | 300 |
| 9 | Plastic Coil | 300 |
| 10 | 3/20 GI Wire | 1000 |
| 11 | 100A Fuse Cut out | 500 |
| 12 | 63A Fuse Cut out | 300 |
| 13 | 32 A Fuse Cut out | 200 |
| 14 | SVL ignator | 5000 |
| 15 | PVC Tape Roll | 5000 |
| 16 | TL Starter | 20000 |

மேற்கண்ட பொருட்களை கொள்முதல் செய்ய உத்தேச செலவின தொகை ரூ.23,96,500/-ஆகும். என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே மேற்கண்ட மின் உபகரணங்கள் யாவும் முன்னனி நிறுவனங்களிடமிருந்து டெண்டர் வரவழைத்து பொருட்களை கொள்முதல் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் குறிப்பு

**மாமன்ற தீர்மானம் எண் : 578**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 10) ம.பொ.9 /13912 / 2005

மதுரை மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு தேவைப்படும் மின்கம்பியாளர், ஹெல்பர் (தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள்) பணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் சப்ளை செய்ய டெண்டர் கோரப்பட்டதில் M/s. இன்டஸ்ட்ரியல் செக்யூரிட்டி பீரோ என்ற நிறுவனத்தார் கீழ்க்கண்டவாறு குறைந்தவிலை விகிதத்தை சமர்பித்துள்ளனர்.

1. மின்கம்பியாளர் நபர் 1-க்கு நாள் ஒன்றுக்கு - ரூ.105/-
2. ஹெல்பர் நபர் 1-க்கு நாள் ஒன்றுக்கு - ரூ. 75/-

மாமன்றத் தீர்மானம் எண் 181 நாள் 6.7.2005 தெருவிளக்கு பணியாளர் தவிர மீதம் உள்ள பணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர் நியமிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தற்போது தெருவிளக்கு இரவுப்பணி, மாட்டுத்தாவணி பேருந்து நிலையம், சுற்றுச்சூழல் பார்க், ராஜாஜி பார்க், மண்டலங்கள் ஆகிய இடங்களில் போதிய பணியாளர்கள் இல்லாததால் தெருவிளக்கு பணிகள் பாதிக்கப்படுகிறது. தெருவிளக்குகளை முழுமையாக ஒளிரச் செய்வற்கும், இரவு நேரங்களில் மாமன்ற உறுப்பினர்களின் குறைகளை சரிசெய்ய வேண்டியிருப்பதாலும் தெருவிளக்கு பணியாளர்கள் அவசியம் தேவைப்படுகின்றனர். எனவே மாமன்றத் தீர்மானம் எண்.181, நாள் 6.7.2005 தீர்மானத்தை மறுபரிசீலனை செய்து புதிதாக பணியாளர் நியமனம் செய்யும்வரை மேற்கண்ட விலை விகிதத்தில் மின் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 579**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 11) B 30 / 01461 /2005

மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டல தெருவிளக்குகளை குறித்த நேரத்தில் மாலையில் விளக்குகளை எரிய விடவும் காலையில் அணைக்கவும் போதிய ஊழியர்கள் இல்லாததால் தெருவிளக்கு பராமரிப்பில் மின்சக்தி சேமிப்பு கருவிகளை நிறுவி அமுல்படுத்தவும் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு சிறந்த நிறுவனங்களிலிருந்து **B.O.T** முறையில் டெண்டர் வரவழைத்து செயல்படுத்த மாமன்றத்தின் (தீர்மானம் எண்.**292** .நாள். **03.03.05)** ஒப்புதல் பெற்று, மின் சேமிப்பு திட்டம் அமுல்படுத்த தமிழ்நாடு முழுவதும் ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ்களில் விளம்பரம் வெளியிட்டு **30.11.2005** ல் டெண்டர் கோரப்பட்டது. வரப் பெற்ற **4** டெண்டர்களில் தொழில் நுட்ப ஒப்பளிப்பு **23.12.2005** ல் நடைபெற்ற

(**Evaluation Committee**) மதிப்பாய்வுக்குழுவில் பரிசீலனை செய்ததில் இரண்டு நிறுவனங்கள் மட்டும் தேர்வு செய்து விலை விகிதம் தந்துள்ள **“B”** கவர் திறக்க முடிவு செய்யப்பட்டது. அதன் பேரில் விலை விகித **“B”** கவர் திறக்கப்பட்டதில் (**Empowered Committee)** அதிகாரக்குழுவில் இரண்டு நிறுவனங்களின் மின் சேமிப்புக்கான பரிசீலனையில் **M/s. SRS Engineers.,** கோயம்புத்தூர் நிறுவனத்தாரின் விலை விகிதம் கீழ்கண்ட விபரங்களினால் ஏற்றுக் கொள்ள கூடியதாக உள்ளது. என முடிவு செய்யப்பட்டது.

1) வருடத்திற்கு கிழக்கு மண்டலத்திற்கு தெருவிளக்கு மின்கட்டணமாக சுமார் ரூ **58,62,780/-** ஆகின்றது. இதில் மேற்கண்ட நிறுவனத்தார் மின்சேமிப்பு கருவிகளை தங்களுடைய சொந்த செலவில் பொருத்தி மின்சேமிப்பு கருவி மூலம் **33%** வருடாந்திர சேமிப்பு செய்து தர கொடுக்கப்பட்டு உள்ளது.

2) சேமிப்பு செய்யப்படும் **33%** மின் துய்ப்பு கட்டணம் (சுமார் வருடத்திற்கு **ரூ.19,34,712)** ஐந்து ஆண்டுகளுக்கு நிறுவனத்தாருக்கு **95%** வழங்கப்பட வேண்டும். இந்த காலத்தில் **5%,** (ஆண்டுக்கு ரூ **96,736/-)** மாநகராட்சி சேமிப்பு ஆகின்றது.

3) ஐந்து ஆண்டுகளுக்கு மின் சேமிப்பு கருவிகளை மேற்கண்ட நிறுவனமே சொந்த செலவில் அமைத்தும், நிறுவனத்தாரின் செலவில் பராமரித்தும் தருகின்றது. எரியாத தெருவிளக்கு விபரத்திற்கான பட்டியலை தினசரி பிரிண்ட் எடுத்துக் கொடுக்க ஒப்புக்கொண்டுள்ளனர்.

4) ஐந்து ஆண்டுகள் முடிந்த பின்னர் நல்ல நிலையில் மின் சேமிப்பு கருவிகளை மாநகராட்சி வசம் மேற்கண்ட நிறுவனத்தாரால் ஒப்படைக்கப்படுகிறது.

மேற்கண்ட விபரப்படி **5** ஆண்டுகளுக்கு பின்னர் நிறுவனத்தார் தந்துள்ள கருவிகளினால் ஏற்படும் மின் சேமிப்பு முழுவதும் மாநகராட்சிக்கு பயனுடையதாக உள்ளது என்பதால் மேற்கண்ட நிறுவனத்தாரின் டெண்டரை ஏற்கலாம் என்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 580**

**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 12) ம.பொ.4 /ம.எண். 948 / 2005

மதுரை மாநகராட்சி மத்திய அரசு தேசிய நகர் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டு திட்டதை நிறைவேற்ற தேவையான நிதியை மான்யம் மற்றும் கடனாக வழங்க உள்ளதை பெற்று மாநகராட்சியின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த உரிய பணிகள் தேர்வு செய்யப்பட்டு அதில் முதற்கட்டமாக மதுரை மாநகரில் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்ற பகுதிகளில் சாலைகளை சீரமைப்பு செய்வதற்கும், மற்றும் வார்டு பகுதிகளில் சாலைகளை அமைக்காமல் விடுபட்ட தெருக்களுக்கு சாலைகள் அமைப்பதற்கும் பகுதி -I ல் 245 பணிகளுக்கு ரூ. 36.98 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள சாலைப் பணிகள் பற்றிய விபரப் பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் தீர்மானம் எண். 229, நாள். 01.08.05 ன் படி ஒப்புதல் பெறப்பட்டது.

***“ போகுதே மழைநீர் வீணாக – சேமித்தால் வாழலாம் நலமாக ”***

மேற்கண்ட திட்டத்திற்கு அரசு ஆணை எண். (டி) எண். 327, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள். 10.08.2005 ன் படி கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து உத்திரவு வழங்கப்பட்டது.

| | |
|---|---|
| அரசு மானிய தொகை | **U:/ 3/00 nfho** |
| மாநகராட்சி பங்கு தொகை | ரூ. 4.53 கோடி |
| தமிழ்நாடு நகர நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழக (TUFIDCO) நிறுவனத்திலிருந்து 8% வட்டி விகிதத்தில் கடனாக பெறப்படும் தொகை | ரூ. 15.10 கோடி |
| பெருநகர திட்டத்தின் (Mega City Programme) கீழ் 3%வட்டி விகிதத்தில் 50% ம், 8% வட்டி விகிதத்தில் 50% ம் தமிழ்நாடு நகர நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழக (TUFIDCO) நிறுவனத்தில் கடனாக பெறப்படும் தொகை | ரூ. 12.63 கோடி |
| **மொத்தம்** | U:/ 35.26 nfho |

எனவே மேற்கண்ட பணிகளுக்கு பல்வேறு தினங்களில் ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டது. அவற்றில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகள் ஆய்வு செய்ய கூர்ந்தாய்வுக் குழுவிற்கு வைக்கப்பட்டது. கூர்ந்தாய்வுக்குழு ஒப்பந்த விதிகளின் படி ஒப்பந்த புள்ளிகளை ஆய்வு செய்து மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவாகவும், மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமமாகவும் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களை தேர்வு செய்துள்ள கீழ்க்கண்ட விவரங்களின் படி குறைந்த மற்றும சமமாக

கொடுத்துள்ள ஒப்பந்தங்களை தேர்வு செய்யவும் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு வேலை உத்தரவு வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

| வ. எண். | வார்டு எண். | மதிப்பீடு எண் மற்றும் வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | L 1 ஒப்பந்த புள்ளி விவரம் | மதிப்பீட்டிற்கு சமமாக விலை விகிதம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | 4 | ம.பொ. 4/Est. 948/05 E.M.G. நகர் 1வது தெரு, 2வது தெரு மற்றும் குறுக்குத் தெருக்களில் பாதாள சாக்கடை தோண்டிய பகுதிகளை சரி செய்து தார் சாலை அமைத்தல் | 14.35 | திரு. பொன். பாஸ்கரன் | மதிப்பீடு விலை விகிதத்திற்கு சமம் | கூர்ந்தாய்வுக் குழுவினால் ஒப்பந்தபுள்ளிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. சமமான விலை விகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம். |
| 2 | 4 | ம.பொ. 4/Est. 949/05 சம்பக்குளம் மெயின் ரோட்டில் பாதாள சாக்கடை தோண்டிய பகுதிகளை சரி செய்து தார் சாலை அமைத்தல். | 16.20 | திரு. பொன். பாஸ்கரன் | மதிப்பீடு விலை விகிதத்திற்கு சமம் | கூர்ந்தாய்வுக் குழுவினால் ஒப்பந்தபுள்ளிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. சமமான விலை விகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம். |

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 581</u>**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

13) **<u>ந.பொ.1 /01596 / 2006</u>**

ஜவஉறர்லால் நேரு தேசீய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசால் தேர்வு செய்யப்பட்ட 63 நகரங்களில் மதுரை மாநகராட்சி ஒன்றாகும். மேற்படி திட்டத்தில் நகர்ப்புறத்தில் உள்ள மக்களுக்கு தேவைப்படும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலைமையை சீர்படுத்தி மேம்படுத்தவும், நகர ஏழ்மை (Urban Poor) மக்கள் வசிக்கும் பகுதிகளில் அனைத்து அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும், மாநகராட்சியில் பல்வேறு துறைகளில் சீர்திருத்தங்கள் செய்யவும் விரிவான திட்டம் தயார் செய்து தமிழக அரசு மூலம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று, மைய அரசிடமிருந்து கேட்டுக் கொள்ளப்பட்டதின் பேரில், (TNUIFSL) தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் நிதி சேவைக் கழகம் மற்றும் மதுரை மாநகராட்சி மூலம் நகர மேம்பாட்டு திட்டம் (CDP/ CCP) தயாரிப்பதற்கு (Consultancy) தொழில் நுட்ப ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்ட ஆலோசகர் மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு அரசு துறைகள், தொண்டு நிறுவனங்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர்களை பல்வேறு கட்டங்களில் கலந்து ஆலோசித்து கீழ்க்கண்டவாறு மதுரை மாநகராட்சிக்கு நகர மேம்பாட்டு திட்டம் (CDP/CCP) தயாரித்துள்ளனர்.

***“ வான் தந்த மழை காப்போம் – வாழ்வுக்கு வளம் சேர்ப்போம் ”***

| வ.எண். | விபரங்கள் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| I | <u>குடிநீர் வினியோகம் மற்றும் சுகாதாரம்</u> | |
| | அ) உடனடி தேவைக்கான திட்டம் | |
| | (1) மதுரை மாநகராட்சிக்கு வைகை அணையில் இருந்து இரண்டாவது குடிநீர் திட்டம் (பகுதி I மற்றும் பகுதி II) | 6800.00 |
| | (2) மேலக்கால், கோச்சடை மற்றும் திருப்புவனம் அருகே வைகை ஆற்றில் அமைந்துள்ள குடிநீர் ஆதாரத்தினை பெருக்குவதற்கு மண் அரிப்பு தடுப்பு அணை அமைத்தல். | 500.00 |

| வ.எண். | விபரங்கள் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| | **ஆ) வருங்காலத்திற்கான திட்டம்** | |
| | (1) முல்லை பெரியார் அணையிலிருந்து தேனி, மதுரை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் உள்ள அனைத்து நகராட்சி, மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான கூட்டு குடிநீா் திட்டத்தில் மதுரை மாநகராட்சிக்கு கூடுதலாக 140 MLD குடிநீர் பெறும் திட்டம் | 22000.00 |
| II | **பாதாள சாக்கடை மற்றும் திடக்கழிவு மேலாண்மை** | |
| | **அ) உடனடி தேவைக்கான திட்டம்** | |
| | (1) திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் முதற்கட்டம், இரண்டாம் கட்டம் மற்றும் குப்பையிலிருந்து உரம் தயாரித்தல், வாகனங்கள் உபகரணங்கள் வாங்குதல் | 1149.00 |
| | (2) பாதாள சாக்கடை திட்டம் புதிய மற்றும் விரிவாக்கப் பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் அமைத்தல் | 2000.00 |
| | (3) தேசிய நதி நீர் பாதுகாப்பு திட்டத்திற்கு மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத் திட்ட அமைச்சகத்திலிருந்து பெற வேண்டிய மானியத் தொகையை ஈடு செய்தல் (MOUD Grant) | 4000.00 |
| | (4) கழிவு நீர் மறு சுழற்சி செய்து உபயோகப்படுத்துதல். (20 MLD) | 1000.00 |
| | **ஆ) வருங்காலத்திற்கான திட்டம்** | |
| | (1) திடக்கழிவு மேலாண்மையின் கீழ் மேலும் தேவையான வாகனங்கள் உபகரணங்கள் வாங்குதல் மற்றும் குப்பையிலிருந்து உரம், மின்சாரம் தயாரிப்பதற்கான அடுத்த கட்ட திட்டம் அமைத்தல் | 2482.00 |
| | (2) பழைய பாதாள சாக்கடை குழாய்களை மாற்றுதல் | 1545.00 |
| | (3) பழைய கழிவு நீரேற்று நிலையங்களை மேம்படுத்துதல் | 1300.00 |
| | (4) கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய மேம்பாட்டுத் திட்டம் மற்றும் புதிய சாக்கடை குழாய் அமைப்பதால் ஏற்பட்ட பழுதான சாலைகளை மேம்படுத்துதல் | 3475.00 |
| III | **மழைநீர் வாய்க்கால் புதிதாக கட்டுதல் மற்றும் அபிவிருத்தி செய்தல்** | |
| | **அ) உடனடி தேவைக்கான திட்டம்** | |
| | (1) புதிதாக திறந்தவெளி மழைநீர் வாய்க்கால் அமைத்தல் | 3000.00 |
| | (2) 9 திறந்தவெளி கால்வாய்களை தூர் வாரி பக்கவாட்டு தூர் அமைத்தல் | 2000.00 |
| | **ஆ) வருங்காலத்திற்கான திட்டம்** | |
| | (1) புதிதாக திறந்தவெளி மழைநீர் வாய்க்கால் அமைத்தல் | 3498.00 |
| | (2) புதிதாக மூடப்பட்ட மழைநீர் வாய்க்கால் அமைத்தல் | 6888.00 |
| IV | **நகர்ப்புற போக்குவரத்திற்கான சாலைகள் நெடுஞ்சாலைகள் மற்றும் பெருநகர் திட்டங்கள்** | |
| | **அ) உடனடி தேவைக்கான திட்டம்** | |
| | (1) முதல் பகுதி (Phase I) பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்ற சாலைகளுக்கு தார் சாலை மற்றும் கான்கிரீட் சாலை அமைக்க | 3600.00 |
| | (2) இரண்டாம் பகுதி (Phase II) பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்ற சாலைகளுக்கு தார் சாலை மற்றும் கான்கிரீட் சாலை அமைக்க | 3600.00 |
| | (3) இரண்டாம் பகுதி (Phase II) ல் பாதாள சாக்கடைப் பணிகள் முடிய இருக்கும் பகுதிகளுக்கு தார் சாலை மற்றும் கான்கிரீட் சாலை அமைக்க | 2500.00 |
| | ***“ விண்ணின் மழைத்துளி – மண்ணின் உயிர்த்துளி ”***<br>**ஆ) வருங்காலத்திற்கான திட்டம்** | |
| | (1) தார்சாலைகளை கான்கிரீட் சாலைகளாக மாற்றுதல் | 534.31 |
| | (2) கற்சாலைகள் தார் சாலைகளாக மாற்றுதல் | 1149.82 |
| | (3) மண்சாலைகளை தாா சாலைகளாக மாற்றுதல் | 2125.20 |
| | (4) புதிய கான்கிரீட் சாலைகள் அமைத்தல் | 271.37 |
| | (5) புதிய தார் சாலைகள் அமைத்தல் | 1167.45 |
| | (6) புதிய கற்சாலைகள் அமைத்தல் | 135.10 |

| வ.எண். | விபரங்கள் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| | **நகரின் முக்கிய பகுதிகளில் போக்குவரத்தினை மேம்படுத்துதல்** | |
| | (1) நகரின் முக்கிய பகுதிகளில் பாதாசாரிகளுக்கான வசதிகள், சுரங்கப்பாதைகள் அமைத்தல் - 5 இடங்கள் | 540.00 |
| | (2) வாகன நிறுத்தம் செய்ய இடங்களை தேர்வு செய்து தேவையான வசதிகள் செய்தல் (ஆவணி மூல வீதிகள், மாசி வீதிகள், வெளி வீதிகள்) | 600.00 |
| | (3) பிரதான வெளி வட்ட சுற்றுச் சாலை அபிவிருத்தித் திடடம் (ORR) ஒருங்கிணைந்த பேரூந்து நிலையத்தில் இருந்து திணடுக்கல் பை-பாஸ் சாலையை இணைக்கு ம் வெளிவட்ட சுற்றுச் சாலைத்திட்டம்) | 2700.00 |
| | (4) வைகை ஆற்றின் குறுக்கே உள்ள தரை மட்ட பாலங்களை மேம்பாலங்களாக மாற்றும் திட்டம் (ஆரப்பாளையம்,குருவிக்காரன் சாலை, ஒபுளாபடித்துறை) | 3000.00 |
| | (5) இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ் பாலங்கள் அமைத்தல் அழகப்பன் நகர், கேட்லாக் ரோடு, அனுப்பானடி, சிந்தாமணி ரோடு, | 1200.00 |
| | (6) ஒருங்கிணைந்த பேரூந்து நிலையத்தினை விரிவாக்கும் திட்டம் | 170.00 |
| V | **தனியார் மற்றும் பொதுமக்கள் பங்களிப்பில் (Public Private Partnership) வாகன நிறுத்தம் செய்வதற்கான இடம் தேர்வு செய்தல் மற்றும் இதர வசதிகள் ஏற்படுத்துதல்** | |
| | (1) லாரிகள், கனரக வாகனங்கள் நிறுத்தம் செய்வதற்கான இடம் தேர்வு செய்து தேவையான வசதிகள் செய்தல் (Truck Terminal) பகுதி I | 600.00 |
| | (2) லாரிகள், கனரக வாகனங்கள் நிறுத்தம் செய்வதற்கான இடம் தேர்வு செய்து தேவையான வசதிகள் செய்தல் (Truck Terminal) பகுதி II | 600.00 |
| | (3) சென்ட்ரல் மார்கெட் பகுதியில் பல அடுக்குகளை கொண்ட வாகன நிறுத்தம் கட்டும் திட்டம் | |
| | பகுதி I | 752.00 |
| | பகுதி II | 504.00 |
| VI | **நகரின் மையப் பகுதியில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் வணிக வளாகங்களை நகரின் எல்லைப் பகுதிகளுக்கு மாற்றுதல்** | |
| | (1) மத்திய காய்கறி சந்தைகளை மாற்றுதல் | |
| | பகுதி I | 1566.10 |
| | பகுதி II | 487.83 |
| VII | **தெருவிளக்குகள் அமைத்தல்** | |
| | (1) புதிய விளக்கு கம்பங்கள் அமைத்தல் | 634.40 |
| | (2) புதிய குழல் விளக்குகள் அமைத்தல் | 201.47 |
| | (3) புதிய சோடியம் மற்றும் உயர்ரக விளக்குகள் அமைத்தல் | 37.35 |
| | (4) புதிய அதி உயர மின் விளக்குகள் அமைத்தல் | 35.00 |
| | (5) மின் உபயோகத்தினை குறைக்கும் தானியங்கி சுவிட்சுகள் அமைத்தல் | 150.00 |
| VIII | **பாரம்பரிய மற்றும் சரித்திர புகழ் வாய்ந்த இடங்களை மேம்படுத்துதல்** | |
| | (1) மீனாட்சி அம்மன் கோவிலை சுற்றியுள்ள பகுதிகளை, அழகுபடுத்துதல் | 300.00 |
| | (2) சுற்றுலா பயணிகளுக்காக பூங்கா, மிருகக்காட்சி சாலை அமைத்தல் | 700.00 |
| | (3) ஒருங்கிணைந்த பேரூந்து நிலையத்தில் அருகில் 'My India' பொழுதுபோக்கு பூங்கா அமைத்தல் | 1000.00 |
| IX | **நகர்ப்புற ஏழ்மை மக்களுக்கான அடிப்படை வசதிகள் மற்றும் இதர மேம்பாட்டு திட்டங்கள் (Service to Urban Poor)** | |
| | (1) குடிநீர் வினியோக குழாய்கள் பதித்தல் | 265.12 |
| | (2) கைபம்புகள், பொதுக் குழாய்கள் சிறிய குடிநீர் தொட்டிகள் கட்டுதல் | 169.14 |
| | (3) பாதாள சாக்கடை குழாய்கள் பதித்தல் | 1060.20 |
| | (4) புதிய பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் சிறுநீர்பிறைகள் கட்டுதல் | 1464.42 |
| | (6) குப்பை தொட்டிகள், சிறிய திடக்கழிவு கிடங்குகள் கட்டுதல் | 42.56 |
| | (7) மூன்று சக்கர வாகனங்கள், தள்ளுவண்டிகள் வாங்குதல் | 46.62 |

| வ.எண். | விபரங்கள் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| | (8) மழைநீர் வடிகால் அமைப்புகள் ஏற்படுத்துதல் | 86.06 |
| | (9) தெருவிளக்குகள் அமைத்தல் | 212.10 |
| | (10) ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மருத்துவமனைகள் கட்டுதல் | 100.00 |
| | (11) ஆரம்ப பள்ளிகள் கட்டுதல் | 75.00 |
| | (12) சமுதாய கூடங்கள், திருமண மண்டபங்கள், இரவு தங்கும் சாவடிகள் கட்டுதல் | 250.00 |
| | (13) வேலை பார்க்கும் மகளிர்க்கு தங்கும் விடுதிகள் கட்டுதல் | 50.00 |
| | (14) அனாதை குழந்தைகள் மற்றும் முதியோர் இல்லங்கள் அமைத்தல் | 100.00 |
| | (15) குடிசை வீடுகள் புனரமைப்பு கட்டிட வசதி செய்தல். (குடிசை மாற்று வாரியம் மூலம் செயல்படுத்துதல்) | 48205.00 |
| X | **நீர்ஆதாரங்களை பாதுகாத்தல் (Preservation of Water Bodies)** | |
| | (1) மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள ஏரி, குளங்களை தூர் வாரி, மழை நீரை தேக்குவதற்கும் வரத்து கால்வாய்களை சுத்தம் செய்வதற்குமான திட்டம் | 500.00 |
| XI | **இதர தேர்வு செய்யப்பட்ட மேம்பாட்டு திட்டங்கள்** | |
| | (1) புதிய இயற்கை வாயு மூலம் தகனம் செய்யும் மயானம் கட்டுதல் | 516.00 |
| | (2) புதிய ஆடு, மாடு வதை செய்யும் இடங்கள் கட்டுதல் | 200.00 |
| | (3) புதிய புவியியல் மற்றும் குடிநீர் பாதாள சாக்கடை குழாய்கள் பதிக்கப்பட்ட இடங்கள் GIS மூலம் வரைபடங்கள் தயாரித்தல் | 700.00 |
| | (4) கணிணி மூலம் வரி வசூல் செய்தல் மேலும் அனைத்து துறை செயல்பாடுகளை கணிணி மயமாக்குதல், தொலை தூர வீடியோ படங்கள் மூலம் வேலைத்திறனை மேம்படுத்துதல் | 100.00 |
| | (5) மாநகராட்சியின் திட்டப் பணிகளை திறம்பட செய்வதற்கு அரசு சார்ந்த இதர துறையினரைக் கொண்டு தகுந்த பயிற்சிகளை பெற்று மேம்படுத்துதல். (Capacity Building) | 100.00 |
| | (6) மதுரை மாநகராட்சியின் பல்வேறு திட்டங்களின் விரிவான மதிப்பீடு தயாரிப்பதற்கு JNNURM ன் வழிகாட்டுதலின் படி ஆலோசகர்கள் நியமிப்பதற்கு (Consultancy) உண்டாகும் செலவின மதிப்பீடு | 1000.00 |
| | **மொத்தம்** | **147740.62** |

மேற்குறிப்பிட்டுள்ள திட்டங்களை 7 வருட காலத்தில் நிறைவேற்றும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் நகர மேம்பாட்டு திட்டத்தில் (City Development Plan/ City Corporate Plan) கீழ்க்கண்ட இனங்களை சீர்திருத்தம் செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**I. கட்டாய சீர்திருத்தங்கள்: (Mandatory Reforms):**

1) மாநகராட்சியின் வரவு செலவு கணக்குகளை புதிய Accrual – Based, Double Entry System மூலம் சீர்திருத்தம் செய்தல்.
2) மாநகராட்சி மூலம் இயங்கும் அனைத்து துறைக்கும், மற்றும் அனைத்து சேவைக்கும் கணிணி மூலம், GIS மற்றும் MIS மூலம் செயல்படுத்துதல்.
3) தற்போது சொத்துவரி வசூல் செய்யும் திறனான 71% சதவீதத்திலிருந்து ஒரு வருடத்திற்குள் குறைந்த பட்சம் 85% சதவீதம் உயர்த்துவதற்கான வழிமுறைகள் ஏற்படுத்துதல்.

***" தேக்குவீர் மழைநீரை – பாதுகாப்பீர் குடிநீரை "***

4) மாநகராட்சி மூலம் சேவை வழங்கும் குடிநீர் வினியோகம், பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள் ஆகிய இனங்களுக்கு செலவிடப்பட்டு வரும் தொகையினை 100% சதவீதம் பயனீட்டாளர்களிடம் இருந்து வசூல் செய்வதற்கு தகுந்த சீர்திருத்தங்கள் செய்தல் (அனைத்து குடிநீர் இணைப்புகளுக்கும் மீட்டர் பொருத்தி அளவீடு பிரகாரம் குடிநீர் கட்டணம் நிர்ணயித்தல், குடிநீர் உபயோகக் கணக்கீட்டில் உள்ள குறைபாடுகளை சரி செய்தல், கட்டணமில்லாமல் வழங்கப்படும் குடிநீர் வினியோகத்தை குறைத்தல், கசிவுகள் மூலமாகவும், அளவுக்கு அதிகமாகவும் உபயோகப்படுத்தப்பட்டு கொண்டிருக்கும் இணைப்புகளை கண்டறிவதற்கு ஆய்வுகள் மேற்கொண்டு, (Leak Detection) இக்குறைகளை நிவர்த்தி செய்ய

நடவடிக்கைள் மேற்கொள்ளுதல். திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை பொதுமக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல். (IEC Activity).

5) நகர்ப்புற ஏழ்மை மக்களுக்கு (Urban Poor) அனைத்து அடிப்படை வசதிகளும், குடிநீர், வடிகால் அமைப்புகள், தெருவிளக்குகள், சாலைகள், அமைத்தல் பள்ளிக் கூடங்கள் கட்டுதல், ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுதல் மேலும் இதர பணிகளை செய்வதற்கு தேவையான படி பட்ஜெட்டில் தனியாக நிதி ஒதுக்கீடு செய்தல்.

6) நகர்ப்புற ஏழ்மை மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் வாழ்க்கைத்தரம் மேம்படுத்துதல்.

**<u>II. தன் விருப்ப சீர்திருத்தங்கள்: (Optional Reforms):</u>**

1) கட்டிட அனுமதி, திறந்த வெளி இடத்தினை மேம்படுத்துதல் போன்றவற்றிற்கான துணை விதிகள் (Bye-laws) மறுபரிசீலனை செய்து சீர்திருத்துதல்.
2) சொத்து உரிமச் சான்றிதழ்களை வழங்குதல்.
3) மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை கட்டாயமாக அனைத்து கட்டிடத்திலும் ஏற்படுத்தும் வகையிலும், நிலத்தடி நீரை பாதுகாக்கவும் துணை விதிகள் (Bye-laws) களை சீர்திருத்துதல்.
4) கழிவு நீரை மறு சுழற்சி மூலம் சுத்திகரித்து மீண்டும் உபயோகப்படுத்தும் வகையில் துணை விதிகள் (Bye-laws) களை திருத்துதல்.
5) நிர்வாகத் துறையில் அதிகப்படியாக உள்ள பணியாளர்களின் எண்ணிக்கையை தன் விருப்ப ஓய்வு திட்டம் மூலமாக குறைத்து அவ்வாறு ஏற்படும் காலியிடங்களை நிரப்பாமல் ஒப்புவிப்பதற்கு தகுந்த பணியாளர் விதிகளை சீர்திருத்தம் செய்தல்.
6) பொது மக்கள் மற்றும் தனியார் கூட்டு முயற்சியில் (Public Private Partnership) முக்கிய பணிகளை, திடக்கழிவு மேலாண்மை போன்றவைகளை மேற்கொள்ளுதல்.

மேலே குறிப்பிட்டுள்ளவாறு, TNUFISL மற்றும் மதுரை மாநகராட்சி மூலமாக தயாரிக்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள், மேம்பாட்டு திட்டங்கள் பல துறைகளில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் ஆகியவைகள் தொகுத்து தயாரிக்கப்பட்டுள்ள நகர மேம்பாட்டுத் திட்டத்தினை (City Development Plan) ஏற்று மாநில மற்றும் மத்திய அரசிற்கு சமர்ப்பிப்பதற்கும், ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தில் (JNNURM) குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் படி 7 வருடங்களில் திட்டப்பணிகளை மேற்கொள்ளவும் மத்திய, மாநில மானியத் தொகை பெறவும், மாநகராட்சி பங்குத் தொகையினை செலவு செய்வதற்கும், நிதி நிறுவனங்களிடமிருந்து மீதமுள்ள தொகையினை கடனாக பெறுவதற்கும் மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 582</u>**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**(ஒம்..) செ. இராமச்சந்திரன்**

**மதுரை**

**மேயர்**

**நாள் : 20.2.2006**

**மதுரை மாநகராட்சி**